# In the Court of the Additional District Munsif, Padmanabhapuram.

O.S.No.. 70/2023 தேதி- 23.06.2026

(D.W.1) . வினிஷ்

**குறுக்கு விசாரணை**

என்னிடம் காட்டப்படும் விண்ணப்பத்தின்மூலம்தான் நான் வாதி வங்கியில் கடன் பெற்றேன் என்றால் சரிதான். நான் விண்ணப்பம் தாக்கல் செய்வதற்கு எத்தனை நாட்களுக்கு முன்னர் நான் கல்லூரியில் சேர்ந்தேன் என்றால் ஒரு மாதத்திற்கு முன்பு சேர்ந்தேன். வாதி வங்கி எந்த துறையை தேர்வு செய்ய வேண்டுமென்று என்னிடம் எந்த உடன்பாடும் ஏற்படுத்தவில்லை என்றால் சரிதான். கல்விக்கான கடன் மட்டும்தான் வங்கியிலிருந்து தரப்படும் அது அல்லாமல் மெஸ்பீஸ் மற்றும் இதர கட்டணங்கள் வாதியால் வழங்கப்படாது என்றால் சரிதான். கடந்த 4 வருடத்தில் கல்விக்கடன் அல்லாமல் மற்ற கட்டணங்களை கல்லூரிக்கு எவ்வளவு கட்டினேன் என்றால் அதுபற்றிய விபரம் எனக்கு தெரியாது. பேருந்து கட்டணமாக வருடத்திற்கு 25 ஆயிரம் ரூபாய் கட்டியிருப்பேன். பேருந்து கட்டணம் மற்றும் கல்விக்கடன் அல்லாத இதர கட்டணங்களை நான்தான் கட்டினேன் என்றால் எனது அப்பா கட்டினார். எனது அப்பா கடனாக வாங்கி கட்டினார் அந்த கடன் முடிக்கப்பட்டுவிட்டதா என்கிற விபரம் எனக்கு தெரியாது எனது அப்பாவிற்குதான் தெரியும்.

எனது அப்பாவும் இந்த வழக்கில் ஒரு பிரதிவாதி என்றால் சரிதான். எனது அப்பா தற்போது கொத்த வேலை செய்து வருகிறார். 2019 ஆம் வருடம் நான் கல்லூரி படிப்பை முடித்தேன். 2021 ஆம் ஆண்டு கல்லூரி படிப்பிற்கான பட்டத்தினை பெற்றேன். 2019 ஆம் ஆண்டு கல்வி ஆண்டு முடிந்தாலும் எனக்கு 3 ஆம் வருடத்திலிருந்து அரியர் இருந்ததால் அதை 2021 ஆம் ஆண்டு முடித்தேன். நான் கூறுவது தவறு முதலாவது வருடத்திலிருந்தே அரியர் இருந்ததால் வங்கி எனக்கு கல்விக்கடனை சரியாக செலுத்தவில்லை என்றால் சரியல்ல. வங்கியிலிருந்து நான் விண்ணப்பித்த முழு கடன் தொகையையும் எனக்கு செலுத்தவில்லை என்றால் சரிதான். எனக்கு அரியர் இருந்ததால் கடன்தொகை தரவில்லை என்றால் அதுபற்றிய விபரம் எனக்கு தெரியாது.

வழக்கு அறிவிப்பிற்கு நான் ஏதாவது பதில் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் நான் நேரில் சென்று வங்கியை அணுகினேன். 28.12.2022 அன்று எனக்கு வழக்கு அறிவிப்பு வந்தது என்றால் தேதி ஞாபகமில்லை. வழக்கு அறிவிப்பை நான் கைப்பற்றினேன் என்றால் அது எனக்கு ஞாபகமில்லை. நான் கல்விக்கடனாக எவ்வளவு பெற்றேன் என்றால் 44,000 ரூபாய். தற்போது வழக்கு எவ்வளவிற்கு போடப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 44000 ரூபாய்க்கு நான் 10000 ரூபாய் திரும்ப செலுத்திவிட்டேன். எனது அம்மா மாதம்மாதம் ஆயிரம் ரூபாய் கட்டிக்கொண்டு வந்தார் எவ்வளவு கட்டினார் என்று எனக்கு ஞாபகமில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் ஸ்டேட்மெண்ட்ஆப் அக்கோண்டின்படி என்று எவ்வளவு கட்டியிருக்கிறேன் என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை. 09.05.2022 அன்று என்னிடம் காண்பிக்கப்படும் ஸ்டேட்மெண்ட்ஆப் அக்கோண்டில் ஏதாவது யன்றிரி இருக்கிறதா என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை நான் டிசம்பர் மாதம் 10000 ரூபாய் செலுத்தினேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஸ்டேட்மெண்ட்ஆப் அக்கோண்டில் ஏதாவது பணம் செலுத்தியதற்கான யன்றி இருக்கிறதா என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை.

நான் மேற்படி 10000 ரூபாய் என்று கட்டினேன் என்று எனக்கு ஞாபகமில்லை. மேற்படி தொகையை செலுத்தியதற்கான ரசீதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். 09.05.2022 அன்று 3000 ரூபாயும், 09.06.2022 ல் 1200 ரூபாயும் மொத்தமாக 4200 ரூபாய் மட்டும்தான் செலுத்தினேன் என்றால் சரியல்ல. நான் தற்போது வேலை எதுவும் செய்யவில்லை. சொந்த வீட்டில்தான் இருந்து வருகிறேன். கேட்டரிங் சர்வீஸ்சுக்காக மாதத்திற்கு இரண்டுமுறை செல்வேன் 700 ரூபாய் கிடைக்கும். இந்த வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் உண்மையில் எனக்கு வருமானம் வரக்கூடிய வேலையை செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. எனது அப்பாவிற்கு எவ்வளவு சம்பளம் என்று எனக்கு தெரியாது. அவருடைய செலவில்தான் இருந்து வருகிறேன்.

நீதிமன்றத்திலிருந்தும் வங்கியிலிருந்தும் சமரசத்திற்காக அறிவிப்பு அனுப்பியும் நான் சமரசம் செய்து கொள்ள எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் நீதிமன்றத்திற்கு சமரசத்திற்காக வந்தேன். கடன் தொகையை கட்டாமல் இருப்பதற்காக வந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.